மேலும் தயாராக இருப்போம், எப்போதும் விழிப்புடன் இருப்போம்!

வெள்ளப்பெருக்கு காலங்களில் மின்சாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி, உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்.



வெள்ளத்தின்போது





மின்சாரத் தாக்குதலுக்கு ஆளாவதைத் தவிர்க்கும் பொருட்டு மின்னியல் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும், அதோடு பிரதான மின் விசை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.




நீர் மட்டம் அதிகரிக்குமேயானால், மின்சார விநியோகத்தை உடனடியாகத் துண்டிப்பதற்கு 15454 என்ற மின்சார வாரியத்தின் (TNB) சேவை மையத்திற்கு அழைக்கலாம் அல்லது Facebook TNB CareLine வழியாகத் தகவல் தெரிவிக்கலாம்.



வெள்ள நீரில் மூழ்கிக்கிடக்கும் மின்னியல் சாதனங்களையோ அல்லது மின்காப்பு சுற்றப்பட்டிருந்தாலும்கூட எந்தவொரு மின்சாரக் கம்பிகளையோ தொடக்கூடாது.



மின்சார தாக்குதலுக்கு ஆளாவதைத் தவிர்க்கும் வகையில் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கும் இரும்புக் கம்பங்கள் மற்றும் மின்சார வாரியத்தின் (TNB) இணைப்புகளிலிருந்து ஒதுங்கியே இருக்க வேண்டும்.



அனைத்து மின் பொருத்துவாய் இணைப்புகளும் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருப்பதோடு, அனைத்து மின்னியல் சாதனங்களும் மின்சார தொடர்புகளில் இருந்து அகற்றப்பட்டிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.



உங்கள் வீட்டில் solar PV பொருத்தப்பட்டிருந்தால், அதை உடனே நிறுத்தம் செய்து விடுங்கள். மின்சார விநியோகம் உங்கள் வீட்டு மின்கம்பித் தொடர்புகளினூடே மீண்டும் ஈர்க்கப்படுவதை இதன் வழி தவிர்க்கலாம்.



முதன்மை மின்விசையை அணைப்பதற்கு முன், அவ்விடம் உலர்வாக (ஈரமின்றி) இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

வெள்ளத்திற்குப் பிறகு





வீட்டில் எந்த மின்னியல் சாதனங்களையோ அல்லது மின்சாரக் கம்பிகளையோ சுத்தம் செய்வதற்கு முன்னதாக பிரதான மின் விசையை நிறுத்தம் செய்யுங்கள்.



வெள்ள நீரினால் பாதிக்கப்பட்ட அனைத்து மின்னியல் சாதனங்கள் மற்றும் மின் பொருத்துவாய் இணைப்புகளும் மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கு முன்னதாக Energy Commission-உடன் பதிவு பெற்றுள்ள மின்சாரக் குத்தகையாளரால் அவை முதலில் பரிசோதிக்கப்பட்டுள்ளதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.



மின்சாரக் கம்பிக்கு அருகாமையில் உள்ள மரக்கிளைகளுக்கு அருகில் செல்வதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் அவற்றில் இன்னும் மின்னோட்டம் இருக்கக்கூடும். உடனடி நடவடிக்கைகளுக்கு TNB-ஐ விரைந்து தொடர்பு கொள்ளுங்கள்.



மின்சாரக் கம்பிக்கு மிக அருகில் இரும்பு/அலுமினிய ஏணிகள் அல்லது கம்பங்களைப் பயன்படுத்தக் கூடாது.



பிள்ளைகளைப் பெற்றோர்கள் எப்போதும் கண்காணிக்க அறிவுருத்தப்படுகின்றனர். கீழே விழுந்து கிடக்கும் மின் கம்பங்கள் அல்லது அறுந்த மின் கம்பிகளை அவர்கள் தொடாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மின்சார விநியோக இணைப்பு குறித்து ஏதெனும் அவசர நிலையோ, பிரச்சனைகளோ அல்லது பிற விவகாரங்களோ இருக்குமேயானால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

TNB CareLine: 15454 **TNB CareLine**

வெள்ள பாதுகாப்பு வழிகாட்டியைப் பதிவிறக்கம் செய்ய இந்த QR குறியீட்டை அலகிடவும்.

TENAGA NASIONAL
Better. Brighter.

Tenaga Nasional Berhad 199001009294 (200866-W)